**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்**

| | |
|---|---|
| **அ.வ.எண்.** 6 / 2020 | பி.வா.சா. 1 |
| **பெயர் :** கருப்பையா என்ற பெரியசாமி | **த/பெ.** சின்னச்சாமி |
| **தாலுகா : நத்தம்** | **கிராமம் :** ஒத்தினிபட்டி |
| **தேதி :** 18.10.2024 | **வயது :** 37-2024 |

1969-ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு 44-ன் படி சாட்சி அழைக்கப்பட்டு உறுதியுரை செய்யப்பட்டு அளித்த சாட்சியம்

சாட்சியம் பதிவு செய்யப்பட்ட நேரம் - 3.45 P.M to 04.11 P.M.

**பிரதிவாதிகள் தரப்பில் முதல் விசாரணை**

1. **நான் இவ்வழக்கின் பிரதிவாதி ஆவேன். எனது தரப்பில் முதல் சாட்சியாவேன். எனக்கு இவ்வழக்கு பற்றிய விவரங்கள் நன்கு தெரியும். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தை எனக்கு படித்து காண்பித்த பிறகு அதில் கையெழுத்து செய்தேன். என் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளை பிரதிவாதிகள் தரப்பு சாட்சியமாக ஏற்றுக்கொண்டு அதிலுள்ள ஆவணங்களை பிரதிவாதி தரப்பு ஆவணமாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.**

1) 13.03.2008 மற்றும் 08.02.2020ம் தேதிகளிட்ட புல எண்.74/40ற்கான ராமசாமி, பஞ்சம்மாள் பெயரிலுள்ள பட்டா முறையே சான்றிட்ட நகல் மற்றும் இணையதள நகல் - பி.வா.சா.ஆ-1 ஆகவும்,

2) 03.03.2020ம் தேதியிட்ட வழக்குச் சொத்திற்குரிய அடங்கல் - சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.2 ஆகவும்,

3) 24.12.2018ம் தேதியிட்ட 01.01.1975 முதல் 31.12.1986 வரையுள்ள வழக்குச் சொத்திற்கான வில்லங்கச் சான்று - சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.3

ஆகவும்,

4) 21.12.2018 ம் தேதியிட்ட 01.01.1987 முதல் 20.12.2018 வரையுள்ள வழக்குச் சொத்திற்கான வில்லங்கச் சான்று - சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.4 ஆகவும்,

5) 07.02.2020 ம் தேதியிட்ட 01.01.1975 முதல் 06.02.2020 வரையுள்ள வழக்குச் சொத்திற்கான வில்லங்கச் சான்று - இணையதள நகல் பி.வா.சா.ஆ.5 ஆகவும்,

6) 04.07.2022 ம் தேதியிட்ட 1 ம் பிரதிவாதி பெயரில் வழக்குச் சொத்திற்கு ஏற்பட்ட கிரைய ஆவண எண்.794/2002 – இணையதள சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.6 ஆகவும்,

7) 04.07.2022 ம் தேதியிட்ட வழக்குச் சொத்திற்கு நாகூர்கனி பெயரில் ஏற்பட்ட கிரைய ஆவண எண்.795/2002 – இணையதள சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.7 ஆகவும்,

8) 09.02.2009 ம் தேதியிட்ட வழக்குச் சொத்திற்கு 1 ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட கிரைய ஆவண எண்.274/2009 – இணையதள சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.8 ஆகவும்,

9) 27.08.2009 ம் தேதியில் வழக்குச் சொத்தை மும்தாஜ் என்பவர் பொப்பத்தான் என்ற கருப்பையா என்பவருக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவண எண்.1828/2009 – அசல், பி.வா.சா.ஆ.9 ஆகவும்,

10) 20.11.2009 ம் தேதியில் வழக்குச் சொத்தை பொப்பத்தான் என்ற கருப்பையா என்பவரிடமிருந்து 1 ம் பிரதிவாதி கிரையம் பெற்ற கிரைய ஆவண எண்.2719/2009 – இணையதள சான்றிட்ட நகல், பி.வா.சா.ஆ.10 ஆகவும்,

11) 15.09.2003 ம் தேதி வழக்குச் சொத்தை 1 ம் பிரதிவாதி வைரவன்

என்பவருக்கு எழுதிக்கொடுத்த ஈட்டு அடைமான பத்திரம் ஆவண எண். 1171/2003 – அசல் பி.வா.சா.ஆ.11 ஆகவும்,

12) 08.03.2005 ம் தேதியிட்ட வைரவன் 1 ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த செல்ரசீது ஆவண எண். 307/2005 – அசல் பி.வா.சா.ஆ.12 ஆகவும்,

13) 15.02.2003 ம் தேதியிட்ட வாதி ராமசாமி, பூசாரி அழகன் வாரிசுகளுக்கு எழுதிக்கொடுத்த பட்டா பாத்திய விடுதலை பத்திரம் - அசல் (பதிவில்லாத ஆவணம் என்பதால் வாதி தரப்பு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது) பி.வா.சா.ஆ.13 ஆகவும்,

14) 15.02.2003 ம் தேதியிட்ட வாதி ராமசாமி, 1 ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த பட்டா பாத்திய விடுதலை பத்திரம் - அசல் (பதிவில்லாத ஆவணம் என்பதால் வாதி தரப்பு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது) பி.வா.சா.ஆ.14 ஆகவும் குறியீடு செய்யவேண்டுகிறேன். **எனது சாட்சியை ஏற்றுக்கொண்டு வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்**.

மேற்கண்ட ஆவணங்கள் பி.வா.சா.ஆ.**1** முதல் பி.வா.சா.ஆ- **14** வரை குறியீடு செய்யப்படுகிறது.

**வாதி தரப்பு குறுக்குவிசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

**சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சி சரி என்று ஒப்புக் கொண்டு என் முன்னிலையில் 18.10.2024 கையெழுத்து செய்துள்ளார்.**

M.Nallakannan., B.Com., B.L.,

Digitally signed by M.Nallakannan., B.Com., B.L.,
Date: 2024.10.18 16:46:37 +0530

**மா.உ.ம.நீ.நடுவர், நத்தம்**